தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 16, யுவ - திருவள்ளுவர் ஆண்டு 2027
1996, பிப்ரவரி 28, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு"

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன் உடையவர்களாக விளங்குபவரின் உயர்ந்த பண்பை மக்கள் அனைவரும் பாராட்டிப் போற்றுவர்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 141, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு நிதியமைச்சர்.

141—

சிறுசேமிப்பு விளம்பரத்திற்கு நிதி ஒதுக்கீடு

***97031—திருமதி கே. மரியம் உல் ஆசியா :**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுசேமிப்புக்கான விளம்பரம் செய்ய, கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா?

[1996 பிப்ரவரி 28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995-96 ஆம் ஆண்டு சிறுசேமிப்பு விளம்பரத்திற்காக வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. சிறுசேமிப்பு வசூலை அதிகரிக்கும் பொருட்டு அதிக விளம்பரம் செய்வதற்காக கூடுதலாக ரூ 15 இலட்சம் 1995-96 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு பற்றிய தகவல்களை மக்களிடையே பரப்ப சிறுசேமிப்பு தகவல் மையங்களை அமைப்பதற்கும், சிறுசேமிப்பு பற்றிய திரைப்படம் தயாரித்து தொலைக்காட்சியிலும், திரையரங்குகளிலும் மற்றும் கிராமங்கள்தோறும் இதைத் திரையிடுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும், அதேபோன்று சிறுசேமிப்பு விளம்பரங்களின் பயனாக நடப்பு ஆண்டு சிறுசேமிப்புத் தொகை எவ்வளவு வசூல் ஆகியுள்ளது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பு வசூலில் விளம்பரம் மிக முக்கியமான பங்கு வகிக்கிறது. பல்வேறு வகையான விளம்பர உத்திகள் கையாளப்பட்டு வருகின்றன. சிறுசேமிப்பு விளம்பரத்திற்காக தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, செய்தித்தாள்கள், கேபிள் டி.வி. போன்ற விளம்பர சாதனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துடன் விளம்பரப் பலகைகள், மின்னணு விளம்பர அமைப்பு, ஆட்டோ ரிக்‌ஷா விளம்பரம், தொலைக்காட்சி விளம்பரங்கள் தயாரித்தல், சாலையோர கைப்பிடி கிராதி விளம்பரங்கள், வி.எச்.எஸ். கேசட்டுகள், விளம்பர பலூன்கள் பறக்க விடுதல், திரைப்பட விளம்பரங்கள், விளம்பரத் தட்டிகள், மடிப்புக் கையேடுகள் போன்ற சாதனங்கள் மூலம் சிறுசேமிப்புத் திட்ட விளம்பரம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டினுடைய இலக்காக ரூபாய் 700 கோடி மாநில அளவிலே சிறுசேமிப்பிலே சேர்க்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டு இருக்கிறது. இப்போது வசூல் நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. எதிர்பார்த்த அளவுக்கு வருமா என்கின்ற ஒரு ஐயப்பாடு இருந்தாலும், கணிசமான அளவுக்கு வரும் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது. ஏற்கெனவே நிறுவனங்களிடமிருந்து சிறுசேமிப்புக்கு வைப்புத் தொகை வாங்கலாம் என்று இருந்ததை சென்ற ஆண்டு நிறுத்தி விட்டதன் காரணமாக நிறுவனங்கள் அளிக்கின்ற அத்தகைய தொகை சிறுசேமிப்புக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டதன் காரணமாக, கொஞ்சம் கஷ்டப்பட்டு சேர்க்க வேண்டிய நிலை இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது.

1996 பிப்ரவரி 28]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பு பற்றிய தகவல்களை மக்களிடையே பரப்புவதற்காக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் எந்தெந்த அளவுக்கு விளம்பர உத்திகள் கையாளப்படுகின்றன என்பதை இங்கே தெரிவித்தார்கள். அதுமட்டுமல்லாமல் மாநிலத்தினுடைய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதில் இந்த சிறுசேமிப்பு மிக முக்கியப் பங்கு வகிப்பதால் சிறுசேமிப்பு வசூல் மற்றும் சிறுசேமிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை மேலும் ஏற்படுத்துவதற்கு பள்ளி, கல்லூரி மாணவர்கள், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், ஜேசீஸ் போன்ற தன்னார்வு அமைப்புகளை பயன்படுத்த அதிகக் கவனம் செலுத்துவதற்கும், சிறுசேமிப்பு முகவர்களாக பெண்களை அதிகமாக நியமிப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புத் துறையிலே முகவர்களாக யாரும் சேரலாம். பெண்களும் தாராளமாகச் சேரலாம். எந்த அளவுக்கு முகவர்களாக வந்து சேருகிறார்களோ அவர்கள் சேர்த்துத் தருகின்ற தொகையைப் பொறுத்து அவர்களுக்குக் கமிஷன் வழங்கப்படுகின்றது. ஆகவே, பெண்கள் இதில் ஈடுபடுவதில் அவர்களுக்குத் தடை ஒன்றும் இல்லை. அவர்கள் தாராளமாக சேரலாம். பள்ளிக்கூடங்கள் மற்றவைகளில் சஞ்சயிகா திட்டம் என்கின்ற ஒரு திட்டத்தை வைத்து மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சிறுசேமிப்புக்கு ஆக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது. அது பெரும்பாலான பள்ளிகளில் புகுத்தப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

முற்பகல் *10.05*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பிலே கொடுக்கப்படுகின்ற வட்டி அதிகமாக முதலீடு செய்வதற்காக உயர்த்தப்படுமா? அந்த வட்டி விகிதங்களைக் கொடுக்கின்றதோடு ஊக்க போனஸ் ஏதேனும் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழி வகுப்பார்களா? சென்ற ஆண்டில் சிறுசேமிப்பில் எவ்வளவு பணம் வசூல் ஆனது? இந்த ஆண்டு வசூல் இலக்கை எட்டுகின்ற அளவிற்கு இதுவரை வசூல் ஆன தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1996 பிப்ரவரி 28

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பில் சென்ற ஆண்டு ரூ. 791 கோடி வசூல் ஆனது. அதற்குக் காரணம் நிதி நிறுவனங்கள் சிறுசேமிப்புத் துறையிலே முதலீடு செய்யலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் அந்த நிலையை மத்திய அரசு தற்போது மாற்றிவிட்டதன் காரணமாக, சிறுக சேமிக்கிறவர்களுக்குத்தான் சிறுசேமிப்பு இருக்கிறதே தவிர பெரிய பெரிய நிதி நிறுவனங்களும் மற்றவைகளும் இதிலே நிதி வைக்கக்கூடாது என்று முடிவு எடுத்துவிட்டார்கள். இருந்தாலும், மத்திய அரசுக்கு நாங்கள் எழுதியிருக்கிறோம். இந்த சிறுசேமிப்பிற்குக் கிடைக்கின்ற தொகை மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் முழுக்க முழுக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மத்திய அரசுக்கு 25 சதவிகிதம் கடனாகவும், மாநில அரசுக்கு 75 சதவிகிதம் கடனாகவும் வருகின்றது. ஆக, இதைப் பொறுத்தமட்டில் 5½ ஆண்டுகளில், உழவர் சேமிப்புப் பத்திரம், இந்திரவிகாஸ் சேமிப்புப் பத்திரம் ஆகியவைகளில் முதலீடு செய்கின்றவர்களுக்கு இரட்டிப்பு மடங்கை நாம் தருகிறோம். ஊக்கத் தொகை என்ற வகையில் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு 100 ரூபாய்க்கும் இரண்டு ரூபாய் என்கின்ற அளவிற்கு வைப்புநிதி வைக்கின்றவர்களுக்கும் தருகிறோம், முகவர்களுக்கும் அவ்வாறே தந்து வருகிறோம். அந்த அளவிற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது என்பதோடு மட்டுமல்லாமல் இலவச பரிசுக் கூப்பன்கள் கொடுக்கப்பட்டு, ,000 ரூபாய்க்கு மேல் ஒரு கூப்பன் என்கின்ற அளவிற்குக் கொடுக்கப்பட்டு, ஒரு இலட்சம் கூப்பன் கொடுக்கப்பட்ட பிறகு குலுக்கல் நடத்தி மாருதி கார் முதல் பலவேறு பொருட்கள் அவர்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையில் பரிசுகளாக நல்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பு வசூலிலே தமிழகம் இந்தியாவிலேயே எத்தனையாவது இடத்திலே இருந்து வருகின்றது? அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகுதான் இன்றைக்கு டெபாசிட் செய்கின்றவர்களுக்குக்கூட ஊக்கத் தொகை வழங்குகின்ற ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, இப்போது ஆர்.ட்டி.ஓ. அலுவலகங்களிலே, மோட்டார் வெகிக்கிள் இன்ஸ்பெக்டர் அலுவலகத்தில் வண்டிகளைப் பதிவு செய்ய வருகின்ற நேரத்தில் சிறுசேமிப்பிற்கென்று ஒரு நிதியை, ஒரு ஆயிரமோ, ஐநூறோ ஏதாவது.....

1996 பிப்ரவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சின்னசாமி, நீங்கள் எத்தனையாவது தடவையாக சட்டமன்றத்திலே இருக்கிறீர்கள் ? துணைக் கேள்வி எப்படிக் கேட்பதென்பது தெரியாதா? கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. வி.கே. சின்னசாமி : நான் 4-வது தடவையாக இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறேன். இது சற்று விரிவான கேள்வி. மோட்டார் வண்டிகளைப் பதிவு செய்ய வருகின்றவர்கள், நம்பர் வாங்குவதற்குக்கூட ரூ. 4000 கொடுப்பதற்கு வசதி படைத்தவர்கள் வருகிறார்கள். எனவே, சிறுசேமிப்பிற்கென்று ஒரு குறிப்பிட்ட தொகையை கட்டாயப்படுத்தி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் புதிய வண்டிகளைப் பதிய வரும்போது, டெபாசிட் செய்ய வேண்டுமென்று ஒரு ஆணையை, அரசு ஆணையாகப் பிறப்பிப்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அப்படிச் செய்தால், இந்தியாவிலேயே சிறுசேமிப்புத் துறையிலே நிச்சயமாக தமிழகம் முதலிடத்திற்கு வரும் என்பதால் நிதி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பிற்கு நிதி வசூல் செய்கின்ற பொறுப்பில் சாதாரண முகவர்கள் மட்டுமல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாநகராட்சியினுடைய ஆணையர்கள், சிறப்பு அதிகாரிகள் ஆகியோர் அத்தனைபேரும் முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்கள். சிறுசேமிப்பிலே நிதி சேர்க்க வேண்டுமென்று அரசுத் துறையைச் சார்ந்த அத்தனை துறைகளின் மூலமாகவும், எந்தெந்த அளவிற்கு மக்களை அணுகி, அவர்களிடமிருந்து சேமிப்பிற்காக நிதி வசூல் செய்ய முடியுமோ அதை வசூலிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால், கட்டாயமாக ஒரு ஆணை பிறப்பித்து, லைசென்ஸ் வாங்க வருகின்றவர்களையோ, பணம் செலுத்த வருகின்றவர்களையோ கட்டாயமாகப் பணம் செலுத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. அப்படிக் கட்டாயப்படுத்தினால், அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்று 'கட்டாயப்படுத்துகிறார்கள்' என்று சொல்வார்கள். ஆகவே, கட்டாயப்படுத்தாமல், அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி ஆர்.ட்டி.ஓ. அதிகாரிகள் முதற்கொண்டு எல்லா அதிகாரிகளும் வசூலித்து வருகிறார்கள். அப்படி வசூலித்து வருகின்ற காரணத்தினால் கணிசமான அளவிற்குச் சேர்கின்றது. சென்ற வருடத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவிலே இருக்கின்ற 25 மாநிலங்களிலே சிறுசேமிப்பைப் பொறுத்தவரையில் மூன்றாவது இடத்திலே தமிழகம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜூ.

[1996 பிப்ரவரி 28

திரு. கே.பி. ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில தனியார் நிதி நிறுவனங்கள் கவர்ச்சிகரமாகத் தங்களது சேமிப்புகளை வளர்ப்பதற்காக விளம்பரங்களைச் செய்கிறார்கள். ஆகவே, சேமிப்புகளை அவர்கள் அதிகமாக வளர்க்கிறார்கள். அதேபோல சிறுசேமிப்புத் துறையில் கவர்ச்சிகரமாக விளம்பரம் செய்வதற்கு இன்றைய கிரிக்கெட் பிளேயர் சச்சின் டெண்டுல்கரை வைத்து விளம்பரப்படுத்தி சிறுசேமிப்புத் துறை ஊக்குவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகின்றேன்

முற்பகல் 10.10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பைப் பற்றி பொது மக்களிடத்திலே நல்ல விளம்பரம் ஆவதற்கும், அவர்கள் இதுபற்றி தெளிவாகப் புரிந்து கொள்கிற வகையில் பல்வேறு சாதனங்கள் மூலமாக விளம்பரப்படுத்திக் கொண்டு வருகிறோம். அந்த வகையிலே அவர்களுக்கு விளம்பரப்படுத்துகின்ற அத்தகைய பெரு முயற்சிகளிலேயும் அரசு ஈடுபட்டு இருக்கிறது. தனியார் நிறுவனங்கள் கவர்ச்சிகரமாக வசூலிக்கிறார்கள் என்றால், அவர்கள் எவ்வளவுக்கு எவ்வளவு கவர்ச்சிகரமாக வசூலிக்கிறார்களோ, அப்படிப்பட்ட நிறுவனங்கள் விரைவாக மூடப்பட்டும் வருகின்றன. அதிலே வைப்பு நிதி வைத்தவர்கள் எல்லாம் தவிக்கின்ற அளவுக்குக்கூட பல்வேறு இடங்களில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றன. ஆனால் அரசாங்கத்தினுடைய முழு உத்தரவாதத்தோடு இந்த சிறு சேமிப்பு இருப்பதன் காரணமாக, மத்திய அரசும் மாநில அரசும் பொறுப்பேற்று இருப்பதன் காரணமாக, நாம் ஓரளவுக்கு நிதானமாகவும் நியாயத்தின் அடிப்படையிலும், இருக்கின்ற பொருளாதாரத் தன்மைகளுக்கு ஏற்பவும் ரிசர்வ் வங்கியினுடைய தன்மைகளுக்கு ஏற்பவும் நாம் வட்டி விகிதம் விதித்து வருகிறோம். ஆகவே இது நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகிறது என்பது மட்டும் உறுதி. 1971-72-லே ரூ. 20 கோடிதான் மொத்தம் நமது மாநிலத்திலே சிறு சேமிப்பாக வசூலாயிற்று. அவ்வப்போது எடுக்கப்படுகின்ற விளம்பரங்களின் காரணமாகவும், மக்களுக்கு தெளிவுபடுத்துவதன் காரணமாகவும் இது வளர்ந்து ரூ. 791 கோடி வருகின்ற அளவுக்கு நிலைமை வளர்ந்து இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் 144, 145 மற்றும் 146 ஆகியவை முன்னதாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

1996 பிப்ரவரி 28]

வினா எண் 144, திரு. ஆ. செல்லதுரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

144—

அரசு மருத்துவமனைப் படுக்கைகள் அதிகரித்தல்

***35776—திரு. ஆ. செல்லதுரை :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூர் தொகுதி, உடன்குடி-சாலங்குடியிருப்பு அரசு மருத்துவமனைப் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆ. செல்லதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சி யுகத்தின் புனிதத் தலைவியாம் எங்கள் இரட்சகர் அம்மாவின் பொற்பாதம் தொட்டு வணங்கி என் கேள்வியைக் கேட்க முன்வருகிறேன். சாலங்குடியிருப்பு அரசு மருத்துவமனை, சாலங்குடியிருப்பு கிராமத்திற்கும் உடன்குடி கிராமத்திற்கும் சேர்ந்து இருக்கின்ற ஒரே அரசு மருத்துவமனையாகும். உடன்குடியைப் பொறுத்தவரையில் 18 ஊராட்சிகளைக் கொண்டது, கிட்டத்தட்ட 2 லட்சம் மக்கள் வாழ்கிற பகுதியாகும்; 90 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கிறவர்கள், அங்கே தனியார் மருத்துவமனைகள் பல இருந்தும், அவர்கள் அனைவருமே அரசு மருத்துவமனைக்குத்தான் வரவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. அங்கே 12 படுக்கைகள் இருக்கின்றன. அத்தனை படுக்கைகளும் பயனற்ற நிலையில் உள்ளன. அந்தப் படுக்கைகள் போதாமல் உள்ளன. இன்னும் 25 படுக்கைகள் அதிகமாக இருந்தால் அங்கே வறுமைக் கோட்டுக்கு கீழே இருக்கின்ற மக்களுக்கு, நோய்வாய்ப்படும் மக்களுக்கு, அந்த நோய்ப் பிணியை நீக்குவதற்கு வசதி வாய்ப்பு இருக்கும். ஆகவே, இன்றைக்கு பசிப் பிணியைப் போக்கிவருகிற நம்முடைய புனிதத் தலைவியின் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நோய்ப் பிணியைப் போக்குவதற்கு அந்த மருத்துவமனையில் படுக்கைகளை அதிகமாகக் கொடுப்பதற்கு - மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடன்குடி நிலைமையை நன்கு உணர்ந்தவர்; ஒரு காலத்தில் 15, 20 நாட்கள் அங்கேயே இருந்து தேர்தல் பணியைச் செய்தவர் - எனவே, அதை மறுபரிசீலனை செய்து, வறுமைக் கோட்டுக்குக்